DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**STC.No.01/2026**

Prosecution **DW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பூமிநாதன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | ராசு | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.05.2026

புகார்தாரர் , எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கிருஷ்ணராயபுரம் வட்டம் கே.புதுப்பட்டியில் குடியிருந்து மம்பட்டி வேலை செய்து வருகிறேன். வழக்கின் மனுதாரர் எனது மனைவி ஆவார். 2, 3 மனுதாரர்கள் எனது குழந்தைகள் ஆவார்கள். எனக்கும், 1 வது மனுதாரர்க்கும் கோவிலில் திருமணம் நடைபெற்றது. எனது மனைவி ஜீவனாம்சம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் DVC வழக்கிற்கு எதிராக மேல்முறையீடு செய்து பகுதியாக அனுமதிக்கப்பட்டது. DVC உத்தரவு படி நான் மூன்று லட்ச ரூபாய் பணம் , இருக்க இடம் தருகிறேன், குழந்தைகளின் படிப்பு செலவை ஏற்றுக்கொள்கிறேன். நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ மனு தாக்கல் செய்துள்ளேன்.

2. என்னிடம் காட்டப்படும் HMOP 14/20214 உத்தரவு தான் என்றால் சரிதான். **HMOP 14/20214 உத்தரவு எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் இப்போதும் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. மனுதாரர் பரிமளா எனக்கு எத்தனையாவது மனைவி என்றால் முதல் மனைவி ஆவார். எனக்கு வேறு திருமணம் நடந்ததா என்றால் இல்லை. எனக்கு ராணி என்ற மற்றொரு மனைவி உள்ளார்களா என்றால் இல்லை. ராணியை இரண்டாவது மனைவி என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேல்முறையீடு செய்யததில 1 முதல் 3 மனுதாரர்க்கு உத்தரவிட்ட ஜீவனாம்ச தொகை ரூ.15,000/–லிருந்து ரூ.12,000/– ஆக 10.09.2025 அன்று குறைக்கப்பட்டது என்றால் சரிதான். அன்றிலிருந்து இன்று வரை எந்த ஜீவனாம்ச தொகையும் மனைவிக்கு செலுத்தவில்லை என்றால் சரிதான்.

2. DVC 02/2021 வழக்கில் பெறப்பட்ட உத்தரவில் இருந்து 10.09.2025 வரை எந்த ஜீவனாம்சமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மனைவி பெறப்பட்ட உத்தரவிலிருந்து 05.04.2021 லிருந்து 10.09.2025 வரை 54 மாதங்கள் மாதம் ரூ.12,000/– வீதம் மொத்தம் ரூ.6,48,000/– மனுதாரருக்கு கொடுக்கப்பட வேண்டிய கடமைப்பட்டவர் என்றால் சரிதான். 10.10.2025 முதல் 10.01.2026 வரை நான்கு மாதங்களுக்கு ரூ.12,000/– வீதம் ரூ.48,000/– கொடுக்கப்பட வேண்டிய கடமைப்பட்டவர் என்றால் சரிதான். DVC 02/2021 உத்தரவின் அடிப்படையில் வழக்கின் இழப்பீட்டு தொகையாக ரூ.25,000/– கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். பெண் குழந்தைக்கு அரசு கொடுத்த உதவித்தொகை ரூ.18,000/– கொடுக்கக் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல

3. குளித்தலை நீதிமன்றத்தில் 9 பவுன் திருப்பி கொடுக்க உத்தரவிடப்பட்டிருந்தது அதனை எதிர்த்து மேல்முறையீடு செய்து 6 பவுனாக கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. மனுதாருக்கு மொத்தம் ரூ.7,22,000/– மற்றும் 6 பவுன் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் என்னால் அவ்வளவு கொடுக்கமுடியாது. நான் வசித்து வரும் வீடு எனது சொந்த வீடாகும். எனது தந்தை பெயர் பொய்வாசி மகன் ராசு ஆவார். எனது அப்பா ராசுக்கு கருப்பத்தூர் கிராமத்தில் பட்டா எண். 1396 ல் சர்வே எண். 5/1 பி10, 5/1 பி22, 5/1 பி6, 9/2 எம், 9/2Q, 9/2U, ஆகிய இடங்களில் மொத்தம் 1 ஏக்கர் 84 செண்ட் இடம் உள்ளது என்றால் தெரியவில்லை அப்பா பெயரில் 1 ஏக்கர் உள்ளது.

4. நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஒரு நாளைக்கு வருமானம் ரூ.300, அல்லது ரூ.400 வரும். எனது இரு மகள்களின் அன்றாட செலவு தொகை எவ்வளவு என்றல் தெரியாது. இரு மகளின் வருட படிப்பு செலவு எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னுடன் எனது அப்பா, அம்மா ஆகியோர்களுடன் சேர்ந்து வாழ்கிறேன் எங்களின் அன்றாட செலவிற்கு நான் மட்டும் தான் வேலைக்கு செல்கிறேன். என்னுடைய குடும்பத்திற்கு மாத செலவிற்கு எவ்வளவு செலவாகும் என்றால் ரூ.1500/- வரும்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.06 10:48:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.